# நிறைவுரை

## நிறைவுரை

'தமிழில் கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் ஓர் - ஆய்வு' என்னும் இவ்வாய்வின் முடிவுகள் இங்குத் தொகுத்து தரஆ&பகம் இயேசு பெருமானின் தோற்றப் பொலிவினை சிறப்பாக வருணித்துள்ளது.

ஜி. சே. வேதநாயகரின் 'அமலக்குரு சதகம்', ஆழ்வார் தோழப்பிள்ளையும், 'திருக்குமாரசதகம்', திட்டூர்த் தேசிகரின் 'பூதனூர்ப் பதிகம்' போன்றவை புரட்சி படைப்புகளாகக் கிறிஸ்தவச் சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்களைக் கூறினாலும், இயேசுநாதரின் ஒப்பற்ற அன்பையும், தூய்மையையும் எடுத்துக்கூறி கிறிஸ்துவைக் கண்டவர்கள் தூய்மையுடன் வாழ வேண்டும் என எடுத்துச் சொல்கின்றன.

நாட்டுப்புற அமைப்பைக் கொண்ட கித்தேரியம்மாள் அம்மானை, முக்திவழி அம்மானை, ஞான ஏத்தப்பாட்டு, செல்லப்பிள்ளைத் தாலாட்டு போன்றவையும் இயேசுநாதரை ஒப்பற்ற இறைவனாகக் காட்டுகின்றன.

எளிமை, இனிமை, வேகம், விறுவிறுப்பு போன்றவற்றை ஒருங்கே கொண்டு யாவரும் புரிந்து கொள்ளும் வகையில் இயேசுநாதரை மீட்பராக, இரட்சகராக, சிலுவைநாதராகக் கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் படைத்துக்காட்டுகின்றன. கவிஞர்களின் அனுபவத்தில் பூத்த இவ்விலக்கிய மலர்களினூடாக மறைநிறைந்த, இறைமை நிறைந்த, மாண்பு நிறைந்த இயேசுகிறிஸ்துவை ஒவ்வொருவரும் கண்டு இன்புறுவர் என்பதில் ஐயமில்லை.

## ஆய்வுக்குரிய பிறச்செய்திகள்

கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்களைப் புறக்கணிக்கும் நிலை மாறவேண்டும். கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்களாக பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பல இன்று கிடைப்பதில்லை. தமிழகத்தில் கிடைக்ககாத இந்நூல்களில் பல உலகநாடுகளில் கிடைக்கலாம். அவைகளைத் தேடிக் கண்டெடுத்து மீண்டும் அச்சிட்டு வெளியிட வேண்டும்.

கி. பி. 19, 20 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல நூல்கள் கையெழுத்துப் படிவங்களாகக் காணப்படுகின்றன. அவைகளைத் தொடர்ந்து பாதுகாக்கும் மனநிலை மக்களுக்கு இல்லை. ஒருமுறை ஒருவரிடம் பார்த்து வந்த நூலைப் பின்னர் செல்லும் போது அவரிடம் கண்டு கொள்ள இயலவில்லை.

இவ்வாறு அழிந்து கொண்டிருக்கும் நிலையைத் தவிர்த்து ஏடு தேடும் முயற்சியில் ஈடுபட்டுக் கிடைக்கின்ற நூல்களைப் பாதுகாக்கவும், பதிப்பித்து வெளியிடவும் முன்வர வேண்டும். மேலும் தரமான நூல்களைத் தமிழ் இலக்கிய உலகிற்குத் தொடர்ந்து அறிமுகம் செய்ய வேண்டும்.

இவ்வாய்வில் குறிப்பிடப்படாத மேலும் பல கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் உண்டு. அவைகளைப் பற்றியும், ஆழமான ஆராய்ச்சியும், விரிவான அறிமுகமும் தேவை. எனவே இம்முயற்சி பெருமளவில் தொடரப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.